ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

இராகவன் புகழறுபது

ஆசிரியர் :

திரு. கா. அ. ஷண்முக முதலியார்
திருப்பத்தூர்

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை
1945

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

இராகவன் புகழறுபது

ஆசிரியர் :

திரு. கா. அ. ஷண்முக முதலியார்

திருப்பத்தூர்

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை, சென்னை

1945

விலை அணா ஆறு



18-5

முன்னுரை

நமது நாடு காவிய ஓவியங்களில் பேர் பெற்றது. நாட்டின் வடிவமே காவிய ஓவியமா யமைந்துள்ளது. இஃது இயற்கை அன்னையின் திருவருள்.

நமது நாட்டுக் காவிய ஓவியங்கள் பல; பல திறத்தன. அவைகளுள் நாடு முழுவதையுங் கவர்ந்தவை இரண்டு. அவை இராமாயணமும் பாரதமுமாகும். இராமாயண பாரதங்கள் பாரத நாட்டின் சூரிய சந்திர கலைகள் என்று கூறல் மிகையாகாது.

இராமாயணம் ஓர் ஆழி; ஒரு பெரும் பாலாழி. அவ்வாழியிற் படிந்தெழுந்து தமிழ் பொழிந்த மேகங்கள் சில. அவற்றுள் இங்கே குறிக்கத் தக்கன இரண்டு. ஒன்று குலசேகரம்; மற்றொன்று கம்பம்.

குலசேகரர் சொரிந்த மாரியும் கம்பர் பொழிந்த மழையும், அருவிகளாய்ப் பெருகிப் பெருகிப் பாலியாய், பெண்ணையாய், காவிரியாய், பொருநையாய், அணி கொழித்துப் பாவிப் படர்ந்து, காவிய ஓவியக் காட்சி யளித்தலை என்னென்று இயம்ப வல்லேன்! பண்டை நாளில் இக்காவிய ஓவிய ஆறுகளில் மூழ்கி இன்பம் துய்த்தவர் பலர். இருள் சூழ்ந்த இந்நாளிலும் இவை களில் மூழ்கி இன்பந் துய்ப்போர் உளர். இவருள் ஒருவர் திரு. கா. அ. சண்முக முதலியார். இவர் இப்

பெற்றிமை வாய்ந்தவர் என்பதற்கு இவர்பால் கனிந்த இந்நூல் சான்று பகரும்.

திரு. சண்முக முதலியார், திரு. கா. அருணாசல முதலியாரும் திரு. முத்துவேடியம்மாளும் அன்பால் ஒன்றி நடாத்திய அற வாழ்க்கையினின்றும் முகிழ்த்த தவச்சேய்; தமிழ் மகவு; செங்குந்தச் செம்மல்; திருப் பத்தூர் தீபம்; அரசியல் அடைவு; அறிவுத் தெளிவு.

அறிஞர் முதலியார் வாழ்க்கை வெற்றியுடையது. எப்படி? அவர்தம் வாழ்க்கையில் கல்விச் செல்வம், பொருட் செல்வம், சேய்ச் செல்வம், பணிச் செல்வம் முதலியன பூத்துள்ளன; 'திருமகள் ஆலை' என்னும் ஓர் அமைப்புங் காய்த்திருக்கிறது. திரு. முதலியார் வாழ்க்கை, பூவுடன் - காயுடன் - நிற்கவில்லை. அது கனிகளையும் ஈனுகிறது. அக்கனிகளுள் ஒன்று இத் தமிழ் நூல். இன்னோரன்ன அமைவுகள் வெற்றி வாழ்க் கையின் அறிகுறிகளல்லவோ?

திரு. சண்முக முதலியார்க்கு (31-10-1945) அறுப தாண்டு நிறைவு பெறுகிறது. அந்நிறைவுக்குரிய நினைவுக் குறியாகத் திரு. முதலியார் வாழ்க்கையினின்றுங் கனிந்தது எது? கனிந்தது 'அறுபது'; எவ் வறுபது? 'இராகவன் புகழ் அறுபது'. இது தவப்பயன்.

இந்நூற்கண் தமிழ்த் தண்மை, இராமாயண இனிமை, ஸ்ரீராமபக்தி முதலியன தலைசிறந்து விளங்க லும், குலசேகரரும் கம்பரும் கோயில்கொண் டிருத்தலும்

புலனாகின்றன. இந்நூலைத் தக்க சமயத்தில் உதவிய நண்பருக்கு எனது நன்றி உரியதாக. நண்பர் இன்னுமொரு நூறு ஆண்டு வாழ்ந்து தமிழ்த்தொண்டு செய்வாராக.

சண்முக முதலியாரும், அவர்தம் குடும்பமும், பிற சூழல்களும் வாழ்க; வாழ்க; வாழ்க பல்லாண்டு. இராகவன் அருள் சுரக்க.

சென்னை }
25-10-1945 }

திரு. வி. க.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

நம்மாழ்வார்

பெரிய திருவந்தாதி

முயற்றி சுமந்தெழுந்து முந்துற்ற நெஞ்சே
இயற்றுவாய் எம்மொடுநீ கூடி — நயப்புடைய
நாவீன் தொடைக்கிளவி யுள்பொதிவோம் நற்பூவைப்
பூவீன்ற வண்ணன் புகழ்

ஸ்ரீ
ஸ்ரீராமஜெயம்

இராகவன் புகழறுபது

சடகோபர் துதி

சீரார் திருக்குருகைச் செம்மல் திகழ்வகுளத்
தாரார் சடகோபன் தந்தளித்தான்—வேரார்ந்
துருவாம் பிறவிநோய் ஓட்டும் மருந்தாம்
திருவாய் மொழியான தேன்.

அயோத்திமாநகரச் சிறப்பு

1 மணிகொண்ட பொற்கலசம் வான ளாய
மாடங்கள் கூடங்கள் மற்று மேனை
அணிகொண்டு வளநலன்கள் அமைய ஓங்கி
அணிபரம பதத்தாரும் அடைய வேண்டும்
குணில்கொண்ட வயமுரசம் குமுற யோத்திக்
கொழுநகரின் பெருஞ்சிறப்பைக் குறித்தெ ழுந்தே
பணிகொண்ட அணைதுறந்தப் பதிவந் தானைப்
பரம்பொருளைக் கரங்கூப்பிப் பணிதல் செய்வாம்.

திருவவதாரம்

2 மன்னிரவி குலம்விளங்க வைய மெல்லாம்
மகிழ்கூர அரசாளும் மகனி லாமல்
பன்னெடுநாள் ஏக்கமுறப் பரிவின் ஆய்ந்து
பகர்ந்துகலைக் கோட்டுமுனிப் பதங்கள் போற்றி
அன்னவனுல் சான்றமக வளிக்கும் வேள்வி
ஆற்றியுயர் தயரதமன் அரிதில் பெற்ற
முன்னவனும் இராகவன்றன் முளரித் தாள்கள்
முன்னுமவர்க் கெந்நலனும் மொய்க்கு மன்றே.

கல்வி முதலிய பேறு பெற்றமை

3 கலைக்கடலாம் வசிட்டனிடம் கலைகற் றுனைக்
கருதரிய தவக்கடல்கோ சிகனுல் மும்மை
உலகுமிறை எனவறியச் செயப்பட் டானை
உயர்தனுநூற் கடலான பரசு ராமன்
மலையனைய பழந்தனுவைத் தரப்பெற் றுனை
மன்னுதமிழ்க் கடலாகும் அகத்தி யன்பால்
நிலைபெறுமாண் புடையபடைக் கலம்கொண் டானை
நிலைபேறு தருவானை நினைந்து வாழ்வாம்.

தாடகை வதம், வேள்வி காத்தல், அகலிகை சாபம்தீர்த்தல்

4 தவன்பணித்தும் பெண்ணிவள்பால் தவறு காணேன்
சரமெங்ஙன் தொடுப்பலெனத் தயங்கி நின்று
சிவந்தரக்கி விடுசூலம் சேர்சால் மார்பில்
சேரவரு குற்றதற்பின் சிரித்துக் கொண்டே
அவிரம்பில் கைவைத்த அருளோ தத்தை
அருமகங்காத் தகலிகையை அடைமா சோய்ந்து
பவம்சிறக்கப் பதத்துகளால் பாலித் தானைப்
பரந்தாமப் பதத்தானைப் பரவு வோமே.

கன்னிமாடத்துச் சீதையைக் காணல்

5 முன்னர்முனி செலத்தம்பி முறையே செல்ல
முகில்மாட மிதிலைக்குள் செல்லும் போது
கன்னிமனைப் பாங்கியர்கள் கடிது காத்தும்
காந்தைமனம் தனைக்கண்ணுல் கவர்ந்து சென்று
மன்னவையில் வில்லிறுத்த ஓசை யோடு
மற்றதனைச் செலவிடுத்து மகிழ வைத்த
துன்னருமிந் திரசாலத் தோன்றல் கஞ்சத்
துணையடிகள் நமக்கென்றும் துணையா கும்மே.

வில் வளைத்தல்

6 திருமுகத்தில் மணங்கண்டு தயா தன்தான்
தேவியரோ டுளமகிழத் தெரிவை நல்லார்
ஒருமுகமாய் அதிசயிக்க முனிவர் வாழ்த்த
உயர்சனகன் இன்பமெனும் உததி மூழ்கத்
தருமுகத்து மலர்பொழிந்து வானோர் போற்றச்
சானகிபேர் உகப்பாலே உடல்பூ ரிப்பச்
செருமுகத்து வில்லுருவ மலைவ ளைத்த
சிராமன் சேவடியைச் சென்னி சேர்ப்பாம்.

திருமணம், பரசுராம பங்கம்

7 வளரிரவி குலம்நிலைக்க மணங்கள் கொண்டு
மக்களிலே மூத்தவனை முனிபின் போக்கித்
தளர்வெய்தி அருஞ்செயல்கேட் டுளம்பூ ரித்துச்
சனகிமணம் நேர்ந்தூர்க்குச் சாரும் ஆற்றில்
விளம்பியடி மேல்வீழ்ந்த வேந்தர் வேந்தை
வெறுத்தசிலை அந்தணன்றன் வில்லை வாங்கி
அளப்பரிய தவப்பயனை அள்ளிக் கொண்ட
அண்ணலிரா கவன்கமல அடிகள் போற்றி.

வனஞ்செல்லக் கோசலையிடம் விடை பெறுதல்

8 குலமகளை மிதிலைவரும் கொழும்பூ மாதைக்
கொண்டமணத் திருக்கோலம் கண்டாங் கின்று
நிலமகளை மணந்துமகன் மோலி பூண்டு
நேர்வனென நோக்கிநின்ற நேயத் தாய்முன்
அலமுறல்நாள் பன்னான்காய் ஆண்டீ ரேழும்
அகலமுனி வரர்ப்பேணி அளாவிக் கானில்
நலமமைய வருவல்விடை நல்காய் என்ற
நம்பியிணை அம்புயத்தாள் நம்பு வோமே.

இளைய பெருமாள் சினம்

9 முன்னவனுக் கரசில்லை முடியு மில்லை
முதிர்வனத்திற் கேகென்று மொழிவாள் பக்கல்
பொன்னகரார் முதலெவர்கள் பொரவந் தாலும்
புவிமாதின் பொறைதீரப் பொருத ழித்தே
மின்னுமணி முடிகவிப்பேன் விலக்கு கின்ற
வீரர்வரு கெனவிளையோன் விளம்ப அன்னோன்
மன்னுசினத் தழலவித்த வளர்பே ரன்பாம்
வாரிதியின் அருளுக்கு வணக்கம் செய்வாம்.

இளைய பெருமாள் உடன்வர வேண்டுதல்

10 பெற்றவர்க்குப் பணியாற்றல் பெரியோய் நிற்குப்
பெருங்கடனின் பணியேவல் புரித லேயெற்
குற்றகடன் உறலொழியென் றுறுத்தல் கூடும்
ஒண்டொடியைத் தடுத்தலுனக் கொல்லு மோநீ
மற்றவளோ டடர்கானில் வதியும் போது
வதிந்தடியேன் தொண்டுசெயும் வகையில் லேனோ
கொற்றவனே எனவிளையோன் குழைந்து கூறக்
குளிர்முறுவல் பூத்தவன்சீர் கூறு வோமே.

சுமித்திரையிடம் விடை பெறுதல்

11 எழுந்தவனி மிசையேவீழ்ந் திரங்கிச் சாம்பி
இறையாணை எனத்தேறி இராம னேயுன்
தொழுந்தந்தை மைதிலிதாய் சோர்வில் லாமல்
தொண்டாற்றி நனிகாத்துத் தோன்றல் இங்கே
எழுந்தருளின் வருகவின்றேல் ஏகு வாய்முன்
எனத்தன்சேய் இலக்குமணற் கிசைத்த அன்னை
மொழிந்தஅருள் மொழிதுணையா முடியிற் கொண்ட
முகில்மேனி மகிபனடி முடியிற் சேர்ப்பாம்.

பிராட்டியார் உடன் புறப்படல்

12 தருந்துயரம் கொடுங்கானம் தாங்காய் என்னத்
தாங்கரிய பேரூழித் தழலும் வேக
எரிந்தெழுநின் பிரிவென்னும் எரியிற் சால
எரிக்குமதோ வனத்தெழுதீ இடைவி டாமல்
அருந்தவத்தோர் பன்னியரோ டவணுற் ருர்கள்
ஆமன்ரே எனவிளம்பி அணிந்தோர் சீரம்
பெருந்தடக்கை பற்றிநின்ற பெரியாட் கொண்ட
பெருமானை இராகவனைப் பேசி வாழ்வோம்.

வனம் செல்லக்கண்ட நகரமக்கள் இரங்கல்

13 புயல்மேனி அழகன்முகப் பொலிவு கண்டு
புவிபுரத்தல் தனினடவி புகுதல் நன்ரே
அயல்மேவும் இளையவனும் ஆர்வம் மிக்கான்
அகமகிழ்ந்தாய் மனைக்கேகும் அணங்கார் ஒக்கும்
கயல்மேவும் விழித்திருவின் களிப்பும் என்று
கடிநகரார் சொலக்கான்போய்க் கழித்து மீண்டு
செயல்மேவ முடிபுனைந்த செல்வன் எங்கள்
திருநாதன் பணிநாளும் செய்கு வோமே.

அரிவையர் இரங்கல்

14 வருதலறி முனிவானும் வசிட்டன் வைத்த
மறுவற்ற நாளடர்ந்த வனமே கற்கோ
சரதமொழி சுமந்திரனும் தடுக்கொ ணுதோ
சான்றகவு சலையிதனைத் தாங்கு வாளோ
கருதலிலா தரசர்பிரான் கைகே சிக்குக்
களித்தளித்த வரமின்று கைத்த தென்னுப்
பெரிதரிவை மாரிரங்கப் பெயர்ந்து மீண்ட
பெருமானு யிரநாமம் பேசு வோமே.

குகப்பெருமான் அன்பு

15 அழகொழுகும் திருவடிவும் அகல்நூல் மார்பும்
அருளொழுகும் திருவிழியும் அமையக் கண்டு
கழல்தொழுது கற்றுவின் கசிந்து நைந்து
கானகத்துன் பணியாற்றிக் காத்து நிற்பேன்
மழையனையாய் உனைப்பிரிந்து வாழேன் என்ற
வனக்குகற்கென் னுயிரனையாய் இளவல் உம்பி
குழல்மொழியுன் அண்ணியெனக் குயின்ற சோதிக்
குலக்குமரன் நலம்பேசிக் குலாவு வோமே.

பரதன் கௌசலைக்குரைத்த சரதமொழி

16 யானென்றும் அறியேன்யா திசைப்பேன் அன்னாய்
எனதாவி பொன்றிடினும் எதுவந் தாலும்
வானென்றும் பெருங்கீர்த்தி மறைபோல் வானை
வனம்போக்கத் துணிவெய்த மாட்டேன் கண்டாய்
கோனவற்கெவ் வளவேனும் குறைசெய் தேனேல்
கொலைமுதற்பா தகங்கட்காம் கும்பீ பாகம்
தானென்று வேனென்ற தம்பிக் கான்ற
தாசரதி சரணநமைத் தலைகாக் கும்மே.

பரதன் கைகேசியை வெறுத்தல்

17 தாயெனவும் பெண்ணெனவும் தயங்கேன் சற்றும்
தயரதன்றன் தலைமகனைத் தவத்தின் பேற்றைத்
தீயெழுவெங் கானகத்தில் செலச்செய் திட்ட
தீமைக்கா உனைக்கொன்று சினம்தீர் கிற்பேன்
தூயமறை சொல்லுகின்ற துணைவற் கஞ்சித்
துடிக்கின்றேன் எனத்தாய்க்குத் துணிந்து சொன்ன
நேயநிறை பரதனைத்தன் தம்பி யாக
நேர்ந்தவனைச் சேர்ந்துதினம் நேசிப் போமே.

குகபரத நட்பு

18 மும்மைநிறை குணமுடையான் சால நல்லன்
முதல்வனினும் பரதனென மூத்த தாயின்
செம்மைநிறை மொழிபெற்ற செல்வன் தன்னைத்
திருமேனி நிலைகண்டு திருத்தாள் போற்றி
அம்மவுனக் காயிரம்பேர் இராம ரொவ்வார்
ஆம்என்னக் குகனுலே அளவிட் டானை
எம்மருங்கும் களிகூர இளங்கோ வாக்கி
இனிதரசு செய்வித்தான் இசைசொல் வோமே.

இளையபெருமாள் திறம்

19 வளர்வனத்தில் கழையிலையால் மணிபொன் தன்னுல்
வானவரும் விழைசாலை வனைந்த சேயை
இளமகளாய் வருசூர்ப்ப ணகையென் பாளின்
இருநசையை வயவாளால் தீர்த்திட் டானைக்
களித்தணையக் கொடுபோய அயோமு கிக்கே
கருத்தவியச் செவிமூக்குக் களைந்தான் தன்னை
உளத்தன்பு நிறைந்தானை உயிர்போல் வானை
உடையானை அடைந்தார்கள் உயர்ந்தார் அன்றே.

வசிட்டனுக்கு இராகவன் இன்னுரை

20 சந்தமணி முடிதாங்கும் தலையில் மாற்றுந்
தாய்கொடுத்த சடைமுடியைத் தாங்கி னுனை
எந்தைமொழி பழுதாகா தீரே ழாண்டும்
இருங்கானத் திருந்தடிகள் இசைத்த வண்ணம்
முந்தைநகர் மேவிமுடி புனைவேன் என்று
முதுகுருவாம் வசிட்டனுக்கு மொழிந்திட் டானை
வந்தபயம் என்றுரை வாழ்விப் பானை
வாழ்த்துமவர் சீர்சொல்லி வாழ்த்து வோமே.

பரதன் பாதுகை பெறுதல்

21 தெரியாமல் மதியிழந்து செலவு தந்தாள்
திரும்பவுனை நகர்க்கழைக்கத் தேடி வந்தாள்
பெரியோய்என் தாயிழைத்த பிழைபொ றுத்துப்
பெரிதுலகம் விரும்பரசு பெறுதல் வேண்டும்
உரியோன்நீ எனப்பரதன் உரைக்கத் தந்தை
உரைதவறு துறுவலென உவப்ப யார்க்கும்
அரிதான திருவடியை அளித்த செல்வன்
அம்புயத்தாள் நம்தலைக்கோர் அணியா கும்மே.

இராகவன் ஐந்து சாபங்களைத் தீர்த்தல்

22 கோதமன்றன் பன்னிக்குக் கொடிய கூற்றின்
கொன்றுழலும் விராதனுக்குக் குகைபோல் பேழ்வாய்
தீதமைந்த கவந்தனுக்குத் திகழும் ஞானம்
செறிபாதற் கன்னைக்குச் சேர்சா பத்தைப்
பாதத்தால் சாபத்தால் பணிந்து தந்தை
பால்பெற்ற இருவரத்தால் படத்தீர்த் தானை
வேதங்கள் அழைக்கின்ற வித்தா வானை
விரையார்ந்த மலர்தூவி வேண்டு வோமே.

சவரி சரபங்கர் சடாயு வீடுபேறு, தண்டக முனிவர் அபயம்

23 எண்சவரி சரபங்கர் சடாயு உய்ய
இணையில்லாப் பெரும்பேற்றை இயைத்த தேவைத்
தண்டகத்து முனிவரர்கள் தயக்கம் கேட்டுத்
தவவேள்விக் கினியூறு சாரா தந்தக்
கண்டகர்கள் கொடுமையினைக் கண்டு கொள்வேன்
கலங்காதீர் எனமொழிந்த கடவுள் தன்னை
அண்டர்குலப் பெருவாழ்வை அளிவெள் ளத்தை
அடிவணங்கும் அடியவர்கட் கடியோம் நாமே.

சுக்கிரீவன் துணை பெறல்

24 மலையகத்தில் வாலிக்கா மறைவுற் ருனை
மதிலிலங்கைக் கோன்முடிகள் பறித்திட் டானை
உலைவில்வலிக் கவித்தானை உவரி யானை
உறுதுணையாய் அனுமானை உடன்கொண் டானை
அலைந்தழுங்கிப் புகல்புகுந்த அருக்கன் சேயை
ஐயமற மராந்துளைசெய் தரச னுக்கிச்
சிலையடுக்கிக் கடலில்வழி செய்த கோவைச்
சென்னியுற வணங்கிநிதம் சேவிப் போமே.

வாலிக்கு வீடுபேறு அளித்தல்

25 சினத்தாலே மதிமயங்கித் தொலைவிழ்ந்தன்
தினகரன்முன் பனிபோலிலன் சிறுமை தீர
மனத்தாலும் வாக்காலும் மறைக ளாலும்
மதிப்பரிய மெய்ப்பொருளே வருவித் துன்னை
இனத்தார்க்கும் எனக்குமெம்பி ஏற்றம் தந்தான்
இவர்களுனக் கடைக்கலமும் ஏற்க வேண்டும்
எனத்தாழ்ந்த வாலிக்கோர் இன்ப வீட்டை
ஈந்தளித்தோன் தகவெண்ணல் இன்ப மாமே.

அனுமான் பிராட்டியைக் காணுதல்

26 தென்றிசையில் எங்கெங்கும் தேடிக் காணுன்
திருவாளற் கில்லையென இயம்ப விற்றுன்
பொன்றுதலே கடனுகும் எனத்து ணிந்தே
புகும்வழியில் இடையூற்றைப் பொருது போக்கிச்
சென்றிலங்கைச் செழுங்காவில் தெரியக் கண்டு
திரும்பிவந்து பணிந்தம்மை சீர்சொன் னுனை
நன்றியறி தலுக்கான்ற நலத்தில் வைத்த
நம்பதும நாபனருள் நாடு வோமே.

பிராட்டி இராவணனை நிந்தித்தல்

27 பல்லிளித்து வாய்கூசிப் பழிச்சொற் சொன்ன
பாவகனுள் பறைஅடிக்கப் பாவி நீதான்
வில்லிதனை வஞ்சத்தால் விலக வைத்து
மெய்யடிகள் வேடமிட்டுக் கவர்ந்து விட்டாய்
அல்லையெனின் அலகையினம் அகங்க ளிக்க
ஆங்கேயுன் தலைபத்தும் அறுத்தி ருப்பான்
புல்லியலோய் போகென்ற பூவை சொல்லைப்
புகழ்ந்தனுமன் புகலமகிழ் புனிதன் காப்பாம்.

பிராட்டி கணையாழிபெற்றுச் சூளாமணிதரல்

28 ஐயமுறேல் ஆண்டகைதாட் கடிமை புக்கேன்
அடையாளம் காண்பீரென் றூழி ஈந்து
வெய்யவனூர்க் கப்பாலாம் மேனி காட்டி
வேறுசில நிகழ்ந்தவற்றை விளக்கிச் சொல்லச்
செய்யவளும் மெய்யென்று தெளிந்து தந்த
திகழ்மணியைக் கால்பெற்ற சிறுவன் தாங்கிக்
கையிலுறத் தரமகிழ்ந்த கரிய செம்மல்
கைம்மாறில் அருளுக்கென் கடவ தம்மா.

பிராட்டி அனுமனுக்குரைத்த திருமொழி

29 நானேசொல் லாலிவரை நீறு செய்வேன்
நானுனது தோளிலுறல் நலத்த தன்று
வானேயும் பெருங்கீர்த்தி வள்ள லுக்கே
வசையாமென் றஞ்சுகின்றேன் வாள ரக்கன்
தானேவந் தெனைத்தீண்டின் தலைவெ டித்துச்
சாவான்என் பதுதேறி இருந்தேன் சான்றோய்
கோனேவந் தெனைமீட்டல் தக்க தென்ற
கோதைமகிழ் நாதனுயர் குணஞ்சொல் வோமே.

இளையபெருமாள் சொல்லைத்தான் கேளாததை உன்னிப்
பிராட்டி இரங்குதல்

30 மதியாலே பெரியவனும் மானின் மாயம்
மதித்துரைத்த இளையவனை மதியா தென்றன்
விதியாலே செவிசுடுஞ்சொல் விளம்பி விட்டேன்
விழுக்குணத்தான் துணைவற்கு விளம்பான் ஒதின்
உதியாதோ சினமென்னை மீட்கா ராகில்
ஒருமதியில் கடனுற்ற உரைப்பாய் என்றன்
துதியார்க்கும் சொல்லனுமா எனச்சொற் றூளைத்
துணைகொண்டான் துணைத்தாள்கள் துதிசெய் வோமே

இராகவனுக்குப் பிராட்டியார் விண்ணப்பம்

31 வேண்டாராம் எனினுமவர் வீரம் காக்க
வேண்டும்எனைக் கைப்பிடித்த வைகல் தன்னில்
தீண்டேனிப் பிறப்பிலிரு தெரிவை மாரைச்
சிந்தையிலும் எனமொழிந்த திறல்வீ ரன்தான்
பூண்டாரம் முடிசூடிப் புழைக்கைம் மாமேல்
புகுங்கோலம் காணசையேன் எனவிண் ணப்பம்
ஆண்டாற்காய் அளித்ததனை அனுமன் சொல்ல
அன்புந்த எழுந்தானை அன்பு செய்வாம்.

அனுமான் இராவணனைக்காணுதல் இலங்கை எரியூட்டல்

32 வனமழித்துத் தடுத்தவரை மறலிக் கீந்து
வன்கணனைக் காணவவர் வசமார்ப் புண்டு
சினமடக்கி எதிரிருந்து சிலைவ லானின்
திறமிசைத்துச் செய்பிழையைத் தெரியச் சொல்லி
இனியபல மொழிவிளம்பி இணங்கார் வாலில்
இட்டஎரி இலங்கையெலாம் எரிக்கச் சுற்றி
அனையருள்கொண் டடனணுகி அடிப ணிந்த
அனுமானை ஆட்கொண்டாற் காட்பட் டோமே.

பிராட்டியாரைக் கண்ட அனுமான் இராகவனிடம் வியந்து கூறுதல்

33 கண்பெற்ற பயன்பெற்றேன் கவினைப் பெற்ற
கற்பென்னும் ஒருபொருளைக் காணப் பெற்றேன்
மண்பெற்ற மகள்தவத்தின் மாண்பு கண்டு
மகிழ்பெற்றேன் எனைப்பெறுகால் மாண்த வத்தால்
திண்பெற்ற உடல்பயனைச் சிறியேன் கொள்ளச்
சிலைவலவ எழுகவென்ற செவ்வி யோனை
விண்பெற்ற நல்லூழால் மேவப் பெற்ற
வீரனொரு வீறுதினம் விளம்பு வோமே.

வீடணன் அடைக்கலம்

34 அண்ணலுனக் கபயமென்று வீட ணன்வந்
தணுகுவதற் கஞ்சியஞ்சி ஒதுங்கி நின்று
கண்ணருவி சோர்போதில் கருதிச் சூழ்ந்த
கவியரசன் முதலோர்கள் கருத்துங் கேட்டே
எண்ணனுமன் ஆங்கறிந்த திசைத்த பின்னர்
இனியமொழிந் தபயமளித் திலங்கை ஆண்டு
மண்ணுள்ள நாளளவும் வாழ்க என்ற
வள்ளலருள் எண்ணிஎண்ணி மகிழு வோமே.

வீடணன் குணங்களை அனுமான் இராகவனுக் குரைத்தல்

35 இராகவனே அடைக்கலமென் றிலங்கை வேந்தற்
கிளையவன்வந் தடைபோதில் இவன்நல் சாந்தன்
பராவருமா மறைசொன்ன படியே நின்றான்
பழிநறவூன் இவனில்லில் பார்த்தேன் இல்லை
குராமலர்ப்பூங் கோதைஇவன் குமரி கண்டாய்
கோற்றொடியோ டிருந்துமனம் குழம்பா தின்சொல்
தராநின்றாள் என்றனுமன் சாற்றக் கேட்டுச்
சரணமருள் பெருந்தகையைச் சரணம் செய்வாம்.

அங்கதன் இராவணனை இகழ்ந்து வைதல்

36 வீரமுனக் குளதேயோ உனது பாட்டி
வீய்ந்தபொழு தவள்பெற்ற வீர ராவார்
பேரவம்பு விடுகையிலுன் தங்கை அங்கம்
பெருவாளா லறுங்காலை கரன்முன் ஞனோர்
தீரவல கிடுகையில்கா விறுத்த போது
சிரமோலி பறிக்கையில்நீ வைத்த போது
சேரலையென் றிலங்கையனை இகழ்ந்து வைத
திறலங்க தனையுடையான் திறம்சொல் வோமே.

இராவண னுக்கு இராகவன் கருணை காட்டுதல்

37 வெள்ளமறு நூறுபடை விளிய விட்டு
வேழமரி தேர்கருவி சாலத் தோற்றுத்
துள்ளொளிகொள் முடிசிதறித் துணையி ழந்தே
தொடிக்கரங்கள் தொங்கவிட்டுத் துணுக்க மெய்தி
உள்ளுடைந்து தலைகவிழ்ந்த இலங்கைக் கோனை
உற்றனதூர் இளைப்பாறி உறுவாய் நாளை
ஒள்ளியமாப் படைகொண்டென் றேகுதி ஞனை
ஓதுமவர் எமையளிக்கும் ஓது வாரே.

மாலியவான் முதலோர் இராவண னுக்கு மதி கூறல்

38 மாலியவான் வலக்கும்ப கருணன் மாமன்
மாரீசன் புகல்மதியை மதியா தானை
நூலியலில் மகோதரன்தான் நுவன்ற கூற்றை
நுண்ணிதெனக் கொண்டானை நோற்றுப் பெற்ற
வேலியற்கை மகனீற்றில் விளக்கிச் சொன்ன
மெய்யுரையைப் பழித்தார்த்து வெறுத்திட் டானைக்
கோலியொரு கணைதொடுத்துக் குறைத்த கோவின்
குணக்கடலில் மூழ்கிநலம் கொள்ளு வோமே.

இராகவனைக் கும்பகருணன் இறுதியில் வேண்டுதல்

39 எம்பியுனைச் சரண்புகுந்தான் ஈற்றில் புக்கேன்
இணையில்சிபி வழிவந்தாய் எனது முன்னோன்
தம்பியெனும் தகைபாரான் தருக்கிக் கொல்வான்
சார்ந்துன்னை அனுமனைநின் தம்பி தன்னை
இம்பரெம்பி பிரியானுய் இருத்தல் வேண்டும்
என்றலையைக் கடலிலிடல் வேண்டு மென்று
கும்பகரு ணன்வணங்கிக் குறையி ரப்பக்
குறித்தவண்ணம் இழைத்தவன்நம் கோமா னன்றே.

இந்திரசித்து நாகப்படை அயன்படை விட்டமை, நிகும்பலையாகம்

40 ஏதானும் தடுப்பரிய எரிகால் நாக
இரும்படையும் அயன்படையும் இசைய ஏவிக்
கோதாக இடர்விளைத்த கொடியோன் தன்னைக்
கொடுமாயச் சீதைசிரம் குறைத்துச் சென்று
வேதாபோல் உயிர்கொடுக்கும் வேள்வி செய்த
வெய்யோனை இடைவிலக்கி விரைந்து செற்ற
தாதாரும் வயமாலைத் தடந்தோள் தம்பி
தனைஉடையான் நமக்குடைய தமரா வானே.

இந்திரசித்து வதம்

41 அந்தரத்தார் மனைவியரோ டங்கும் இங்கும்
அலையஇழி குற்றேவல் ஆற்றச் சில்லோர்
சந்தமறை முனிவரெலாம் தழலார் வேள்வி
தவமியற்று திடையூற்றால் தயங்க வானுள்
இந்திரனும் சிறையுறச்செய் இலங்கை மைந்தன்
இருஞ்சிரத்தைத் திருவடிமுன் ஏவால் வைத்த
சுந்தரனும் இளையோன்றன் துணைவ னான
சுரர்ஏத்தும் உரவோனைத் தொழப்பெற் றேமே.

இராவணன் வீடணன்மீதுவிட்ட வேலின் திறம்

42 கொன்றேருயிர் குடித்தலது மீளா வேலைக்
கோதையொடு மயன்கொடுத்த கொற்ற வேலைச்
சென்றெதிர்ப்பின் அயன்எனினும் செருக்கும் வேலைச்
செருநருடன் சேர்ந்துளவு செப்பும் பின்னேன்
பொன்றவென இலங்கையர்கோன் பொருந்த விட்ட
புகைவேலை நல்லறமும் புகழும் நிற்கத்
தன்றடமார் பகத்தேற்ற தம்பி தன்னைத்
தழுவிமகிழ் முழுமுதற்றுள் தலையில் சேர்ப்பாம்.

இளையபெருமாள் வேலேற்ற விதம்

43 வெய்யவடி வேலினிலை விளம்பி ஏற்க
மேவியநல் வீடணனை விலக்கி முன்போய்க்
கய்யடைந்த அங்கதனும் கவியின் வேந்தும்
கால்மகனும் முந்தமுந்திக் கடுகி ஏற்றேய்ந்
துய்யமருந் தனுமன்தர உயிர்த்த சேயை
உற்றவர்க்காய் உயிரீந்த இளைய கோவை
அய்யநினக் கிணைசிபியும் ஆவ னேவென்
றகமகிழ்ந்த புகழ்மலையை அஞ்ச லிப்பாம்.

மூலபலச் சேனை வதம்

44 மானிடரும் வானரரும் மடிதல் திண்ணம்
வருமூலப் படைக்கெல்லாம் வயவி ருந்தாம்
ஊனினங்கள் சமைக்கவென உரைத்த தீயோன்
ஓலமிடக் காலினடந் தொருமை யாக
நானிலமும் யாவுலகும் நடுந டுங்க
நாணேற்றி அவர்பிணங்கள் நகத்தின் மிக்கே
வானிமிரச் சரந்தொடுத்த வாகை யோனை
மலரிட்டுப் புகையிட்டு வணங்கு வோமே.

மூலபலச் சேனையின் பெருக்கம்

45 ஆனையொரா யிரமனைத்தே அடலும் சேனை
அதிபரும்தேர் பதின்மடங்காம் அசுவம் கோடி
வானையுறில் சிலைமணியோர் மணிய டிக்கும்
மணிதனுவில் கணகனென இடைவி டாமல்
தானடிக்க ஏழரைநா ழிகையம் மம்மா
தனிமூல பலச்சேனை தரையில் வீழ
ஈனமறு படைபொழிந்த இராமன் கண்டீர்
எங்கெங்கும் நிறைவான இறைவன் மாதோ.

திருத்தேர் ஏறுதல்

46 பூதலத்தில் எழுதிவில் புணரி ஏழில்
புகர்மதிதி கதிர்வாயு புயல்வட் டத்தில்
மீதலத்தில் மலையேழில் விதிதன் னூரில்
வேறுள்ள வைப்பிலெல்லாம் மேவப் பின்போய்ச்
சீதமதி வேணிசொலத் தேவர் கோமான்
தெரிந்தளித்த ஒப்புயர்வில் திருத்தேர் ஊர்ந்து
மாதலிகோல் கொளவிலங்கை மறவ னோடு
மறம்கொண்டான் திறங்கண்டார் வழங்கு வாரே.

இராவணன் ஏவிய சூலம் உங்காரத்தால் அழிதல்

47 எங்காரை அடைந்துய்வோம் எனவா னோர்கள்
இரியமுனி வரர்கணங்கள் இதயம் ஏங்க
மங்காத பெருந்தழலை வழங்கி விண்ணும்
மண்ணகமும் ஒளிதிகழ மனவே கத்தின்
சங்கார காலனெனச் சார்ந்த வெய்ய
தசமுகனெய் சூலத்தைச் சரம்வீ சாமல்
உங்காரத் தால்பொடிசெய் உயர்வே தம்சொல்
ஒருபொருளைத் திருவருளை உன்னி வாழ்வாம்.

இராம இராவணப் போர்

48 மண்டிருளைக் கதிரவன்மேல் மலைய விட்ட
வாறேபோல் தசமுகத்து வாள ரக்கன்
கண்டெடுத்துத் தீப்பொறிகள் கண்கள் சிந்தக்
காதளவும் நாணிழுத்துக் கனன்று கைத்த
பண்டுபெற்ற தெய்வவலப் படைகள் எல்லாம்
பண்பொழிந்து பொடிப்பொடியாய்ப் பட்டு வீழத்
தண்டலிலாத் தனுவளைத்துச் சரங்கள் தொட்ட
தனிமூலப் பரம்பொருளின் தாள்காப் பாமே.

இராகவன் அறுக்க அறுக்க இராவணன் தலைகள் முளைத்தல்

49 அறுத்தறுத்து விழத்தள்ள அடுக்க டுக்காய்
அற்றுவிழுந் தலைமலைமேல் அலகை யீட்டம்
செறுத்தெழுந்து மிகத்துள்ளிச் சிரப்பந் தாடச்
சிறுதொழிலன் தலைமுளைத்தல் தீர்ந்து மாளப்
பொறுத்தெண்ணி மலர்கொண்டு பூசை செய்து
பூவருநான் முகன்படையைப் பொருவில் வாங்கி
உறுத்தெய்து புவனங்கள் உயக்கொண் டானே
உலகாக்கிக் காத்தழிக்கும் ஒருவ னாமே.

இராவண வதம்

50 திக்கோடி ஒளிந்தசுரர் செழும்பூ மாரி
சிந்தமுனி வரர்வாழ்த்தத் தெளிஞர் ஏத்தப்
புக்கோடிக் கவிகணமம் புயத்தாள் போற்றப்
புன்மைமலி இராவணன்பூண் பொலிந்த மார்பில்
எக்கேடும் யாராலும் இசையா தென்ன
இருந்தவத்தால் பெறுவரமும் எஃகும் ஏனை
முக்கோடி வாழ்நாளும் முடிய அம்பெய்
முற்றறிவன் பெற்றியையார் மொழிவார் அம்மா.

பிராட்டி தீயில் முழுகுதல், யாவரும் நகர்க்கேகுதல்

51 அரமகளிர் அரக்கர்குல அரிவை நல்லார்
அணிவகுத்துப் படைகள்பிடித் தணிந்து கொண்டு
தரமரிய சிவிகைமிசை தாங்க வந்து
தலமிருந்த கனியாறத் தம்பி தொட்ட
பரவுமழற் பெருந்தடத்தில் படிந்தெ ழுந்தே
பதம்பணிந்த சனகியொடும் பரந்த அன்பால்
வரவிழைந்த குழாத்தொடுநல் விமானத் தூர்ந்து
வளர்வளத்த அயோத்தியுற்றான் மலர்த்தாள் போற்றி.

கைகேசியைத் தயரதன் ஏற்கப் பிராட்டியை இராகவன் ஏற்றல்

52 கானகத்தில் செலவிடுத்த தாயால் அன்றோ
கழிநலன்கள் மூவுலகும் அடைந்த தென்று
தானகத்தில் கருதினனும் போலும் நங்கை
சானகியை வெறுத்தனன்போல் நடித்துக் காட்டி
வானகத்தார் வரவழைத்த மன்னன் கேகை
மன்மகளை மனையாக ஏற்கச் செய்து
தேனகத்து மொழித்திருவைத் தானும் ஏற்ற
திறல்வீரன் திறம்பேசும் சீர்பெற் றோமே.

பரதன் அன்பிற்கு இராகவன் அருளல்

53 மரவடியே அரசுசெய மழைக்கண் வார்த்து
வளர்நந்திப் பதியிலிறை வரவு நோக்கி
இரவிலும்கண் துயிலாதிந் தியம டக்கி
இசைத்தபதி னான்காண்டில் எய்தா னாக
எரிவளர்த்து வலம்சுற்றி இறங்கும் எல்லை
எழில்பரதன் முன்னெய்தி இறுகப் புல்லித்
திருவிழியின் அருள்மாரி சிந்தி னானைச்
சிந்திக்கும் தெள்ளியரைச் சிந்திப் போமே.

இராகவன் தம்பியர் அறுவர்

54 தந்தைவரம் தரவனம்போய்த் தருமம் ஓங்கத்
தமதிருக்கை பெற்றிமையோர் தழைத்து வாழ
நிந்தையறு குகன்கதிர்சேய் நிருதர் தங்கள்
நிருபனொடு தம்பியர்கள் அறுவர் ஆகச்
சிந்தையினும் கடுவேகச் சிலையம் பாலே
செழுங்கமலத் திருமகளைச் சிறைமீட் டேற்றே
முந்தையுல குய்யஅரி யணையின் மேவி
முடிபுனைந்த இராகவன்தாள் முடியில் வைப்பாம்.

திருமுடி அணிவிழாவிற்கு வந்தவர்கள்

55 வானவர்கள் வானரர்கள் மாண்பு மிக்க
மறைவலவர் மாதவர்கள் மண்ணோர் தீவேழ்த்
தானமுறை வார்மன்னர் சசியா தித்தர்
சார்திக்குக் காவலர்கள் தாமும் யாரும்
மானமரும் மருள்நோக்க மலர்ப்பூங் கோதை
மாதரொடும் ஆதரித்து மருங்கு சூழ
நானநறும் குழற்சனகன் நங்கை யோடு
நற்றவிசில் உற்றவன்சீர் நவிலு வோமே.

திருநீராட்டு, திருமுடி புனைதல்

56 மன்னுமறை முனிவர்மதி வலவர் மன்னர்
மனத்தூய்மை உடையரெலாம் மாநீர் ஆட்டப்
பொன்னணிவாள் குடைகவரி புகழ்கால் மைந்தன்
பொற்பணைத்தோள் அங்கதன்தம் பியர்கள் தாங்கத்
துன்னுமலர் விரைசெறிபூங் குழலி ஓங்கத்
தொல்வசிட்டன் முடிகவிக்கத் துலங்கு செம்பொன்
நன்மணிமா மண்டபத்தின் நாப்பண் கோல்கொள்
நம்மிரகு நாயகனை நண்ணு வோமே.

திருமுடியணி விழாச்சிறப்பு

57 மறைமுழங்கச் சங்கார்ப்ப வாச்சி யங்கள்
மலிந்தொலிப்பப் பாவலர்கள் வண்ணம் பாடக்
கறையில்மதி முகமடவார் கவின்பொற் கும்பம்
கதிரொளிபோல் செழுந்தீபம் கரத்திற் ருங்கப்
பிறைநுதலார் அரியநடம் புரிய யாரும்
பெருமகிழ்வால் பல்லாண்டு பல்லாண் டாக
இறைவாழ்க எனவாழ்த்தப் புவன மாதை
எழில்மணங்கொள் அழகனருள் எய்து வோமே.

நங்கைமார் பலவாறு நவிலுதல்

58 தேவியினை யாள்கொடுத்த சீரீ தென்பார்
சேவைசெயும் கூனியருள் திருவீ தென்பார்
மேவியசூர்ப் பணகைதரு மேன்மை என்பார்
விழைமானய் வந்தவனல் விளைபே றென்பார்
ஏவுபடை அளித்தமுனி இவன்காண் என்பார்
இவள்திருவிற் குயிர்த்துணையாய் இருந்தாள் என்பார்
ஆவலினிங் ஙனமடவார் அறையச் சிங்க
அணைகொண்டான் துணைகொண்டார்க் காட்செய் வோமே.

குடிகள் மகிழ்ச்சி

59 அரியதிறல் தம்பியர்கள் அறுவர்ப் பெற்ருன்
அங்கதனை அனுமானைத் துணையாய்ப் பெற்ருன்
உரியதவ வசிட்டனைத்தன் குருவாய்ப் பெற்ருன்
உயர்ஞானச் சனகன்தவம் உளுற்றிப் பெற்ற
எரிவருபூந் திருமகளை மனையாப் பெற்ருன்
இனையவன்நம் அரசாக எய்தப் பெற்ரேம்
பெரியதிதின் பெறுவதெதென் றெவரும் பேசப்
பேணியுல காண்டவனைப் பேணு வோமே.

வாழ்த்து

60 மறைவாழி முறைவாழி மறையோர் வாழி
மண்வாழி விண்வாழி மக்கள் வாழி
அறைகின்ற அறம்வாழி நலன்கள் வாழி
அடியார்கள் வாழிசரண் அடைந்தார் வாழி
இறைவாழி கோல்வாழி இளையோர் வாழி
எமையளித்த அன்னைதிரு ஏற்றம் வாழி
குறைவிலருள் வாழியெனச் சான்றோர் வாழ்த்தக்
கோல்கொண்டான் வாழிதமிழ் வாழி நன்றே.

சக்கரவர்த்தித் திருமகனார் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்

ஆண்டாள் திருமொழி

மாதலி தேர்முன்பு கோல்கொள்ள மாயன்
இராவணன் மேல்சர மாரி
தாய்தலை அற்றற்று வீழத்தொ டுத்த
தலைவன் வரவெங்கும் காணேன்
போதலர் காவில் புதுமணம் நாறப்
பொறிவண்டின் காமரம் கேட்டுன்
காதலி யோடுடன் வாழ்குயி லேஎன்
கருமாணிக் கம்வரக் கூவாய்.

பொய்கையாழ்வார்

அடைந்த அருவினையோ டல்லல்நோய் பாவம்
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில்—நுடங்கிடையை
முன்னிலங்கை வைத்தான் முரணழிய முன்னொருநாள்
தன்விலங்கை வைத்தான் சரண்.

பூதத்தாழ்வார்

யானே தவஞ்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான்—யானே
இருந்தமிழ்நன் மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது.

பேயாழ்வார்

எய்தான் மராமரம் ஏழும் இராமனாய்
எய்தானம் மான்மறியை ஏந்திழைக்காய்—எய்ததுவும்
தென்னிலங்கைக் கோன்வீழச் சென்று குறளுருவாய்
முன்நிலம்கைக் கொண்டான் முயன்று.

Printed at the Sadhu Press, Royapettah
Issue Card No. M. S. 115—Copies 1,000—29-10-45